| 12 | திரு. ஜே.ஏ.டி.ஐ. நிரங்க | பயிற்சி ஆய்வு உதவியாளர் | பி.எல்.ஈ.பி. |
| 13 | திரு எஸ்.ஏ.கே. தர்மதாஸ | தொழில்நுட்ப உதவியாளா | வி.நி.பி. |

| | | | |
|---|---|---|---|
| 14 | திரு யூ.பீ. பண்டார | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 15 | திரு ஜே.ஏச்.எஸ் பிரியதர்சன | திட்ட உதவியாளர் | சே.மு.நி.பி. |
| 16 | திருமதி பி.எம்.சீ. கூரே | திட்ட உதவியாளர் | ப.கி. |
| 17 | திரு டப்.ஏ.என். விதுரங்க | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 18 | செல்வி டி.டப்.எம்.ஆர். தஹநாயக்க | திட்ட உதவியாளர் | ப.கி. |
| 19 | திருமதி ஏச். ஏ. எஸ். விக்கிரமசிங்க | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 20 | திருமதி ஜி.ஏ.டி.சீ. ரசங்கிகா | திட்ட உதவியாளர் | நூல. |
| 21 | திரு என்.கே.ஏ.ஏ. நிரோஷன் | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 21 | செல்வி கே.ஜி.யூ. சஞ்ஜீவனி | திட்ட உதவியாளர் | ஆ.நி.பி. |
| 22 | திரு எம். ஐ. இப்திகார் | திட்ட உதவியாளர் | சி.சி.என்.ஏ. |
| 23 | திருமதி எஸ்.எல்.பி. விதானகே | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 24 | திருமதி ஆர்.ஏ.எம். பிரியதர்சினி | திட்ட உதவியாளர் | நி.கி. |
| 25 | திருமதி கே.ரி.சீ. கருணாநாயக்க | திட்ட உதவியாளர் | த.நி.பி. |
| 26 | செல்வி பீ.கே.ஆர். டுல்மி | திட்ட உதவியாளர் | சே.மு.நி.பி. |
| 27 | செல்வி கே.எச். டில்ருக்ஷி | திட்ட உதவியாளர் | ஆ.நி.பி. |
| 28 | திரு ஆர்.ஏ.யூ. ரணவக்க | திட்ட உதவியாளர் | நி.கி. |
| 29 | செல்வி டி.ரி.ஆர்.எஸ். ஷெரிபா | திட்ட உதவியாளர் | நூல. |
| 30 | செல்வி ஜி.எஸ். ஆயிஷா | திட்ட உதவியாளர் | ப.கி. |
| 31 | செல்வி எம்.எஸ்.எஸ்.ஆர். வீரசிங்க | திட்ட உதவியாளர் | ஆ.நி.பி. |
| 32 | செல்வி டி.எஸ். முரகே | திட்ட உதவியாளர் | நிதி.கி. |
| 33 | செல்வி கே.பி.பீ.என்.நி | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 34 | செல்வி எஸ்.ஆர்.எம்.ஐ. சந்தமாலி | திட்ட உதவியாளர் | சே.மு.நி.பி. |
| 35 | செல்வி டி.வி.ஏ.கே.எல். சேனாரட்ண | திட்ட உதவியாளர் | நிதி.கி. |
| 36 | செல்வி ஏ.என்.ரி.கே. அபேகுனவர்தன | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 37 | செல்வி டப்.எஸ்.எஸ். இந்திரசேன | திட்ட உதவியாளர் | நூல. |
| 38 | செல்விகே.எஸ் லியன்வலகே | திட்ட உதவியாளர் | நூல. |
| 39 | செல்வி டப்.ஜீ.ஜீ.வல்பொல | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 40 | திரு டி.பி.ஏ. தஹநாயக்க | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 41 | செல்வி எம்.எல்.டி.எஸ் லியனகே | திட்ட உதவியாளர் | ப.கி. |
| 42 | செல்வி ரி.டி.என்.எஸ் ஆரியவன்ச | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 43 | திருரி.பி.ஐ.யு.பெரேரா | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 44 | செல்வி ரி.எச்.கி மனோகரி | திட்ட உதவியாளர் | ஆ.நி.பி. |
| 45 | செல்விஆர்.ஏ.வி.ஐ.ஆர் விஜயவர்த்தன | திட்ட உதவியாளர் | பி.எல்.ஈ.பி. |
| 46 | செல்வி சி.வி.ரணசிங்க | திட்ட உதவியாளர் | பணி.அ. |
| 47 | திரு ஜே.கே.வி.என் ஜெயவர்த்தன | திட்ட உதவியாளர் | நிதி.கி. |
| 48 | திரு ரி.எல்.ஏச் மதுசங்க | திட்ட உதவியாளர் | வி.நி.பி. |
| 49 | செல்வி என்.ஏ.சி.என் நிசாங்க | திட்ட உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 50 | திரு ஆர்.எல்.ஜீ. மதுரங்க | அலுவலக உதவியாளர் | ம.வ.மு.பி. |
| 51 | திரு கே.டி. தயாஸ்ரீ | அலுவலக உதவியாளர் | பணி.அ. |
| 52 | செல்வி கே.எஸ்.என். அசோகா | சுத்திகரிப்புத் தொழிலாளர் | நி.கி. |

**+ஓய்வின்பின் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தல்**


***அடிக்குறிப்பு*** *- நி.கி - நிர்வாகக் கிளை, ப.கி. - பரீட்சைக் கிளை, நிதி.கி. - நிதிக் கிளை, நூல. - நூலகம் பி.எல்.ஈ.பி. - பி.எல்.ஈ.பிரிவு, சி.சி.என.ஏ.-சிஸ்கோ கணினிக் கட்டமைப்புக் கலாசாலை, ஆ.நி.பி.-ஆங்கில பிரிவு, வி.நி.பி.-விரிவாக்க நிகழ்ச்சித்திட்டம், த.நி.பி.-தமிழ் பிரிவு, சே.மு.நி.பி.-சேவை முகாமைத்துவ பிரிவு, ம.வ.மு.பி.-ம.வ.மு. பிரிவு, பணி.அ.-பணிப்பாளர் அலுவலகம்*

## 08. நூலகம்

தொழிலாளர் கல்வி இளமாணிப்பட்ட கற்கை நெறி, மனிதவள முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்ளோமா கற்கை நெறி,வணிக முகாமைத்துவத்தில் முதுமாணி, சேவை முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை, டிப்ளோமா,நிறைவேற்று டிப்ளோமா மற்றும் விஞ்ஞான முதுமாணி(சிங்களம் மற்றும் ஆங்கிலம்) என கற்கை நெறிகளை தொடரும் மாணவர்களுக்கு பிரதான வளமாக இந்த நிறுவகத்தின் நூலகம் அமைந்துள்ளது. இது கிட்டத்தட்ட 23,000 நூல்களைக் கொண்டுள்ளது.

அத்துடன் இந்த நூலகத்திற்கு 971 புதிய நூல்கள் 997,781,71 ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 2015 இல் 05 நூல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன. மேலும் இந்த 2015 காலப்பகுதியில் ரூபா 64,900 செலவழித்து சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்துள்ளது.

### 08.1 நூலகத்தினால் வழங்கப்படும் சேவைகள்




### 08.2 நூலக உறுப்புரிமை விபரங்கள்

| பகுப்பு | விளக்கம் | உறுப்பினர் தொகை |
|---|---|---|
| மாணவர்கள் | டி.எல்.ஈ | 51 |
| | பி.எல்.ஈ I | 197 |
| | பி.எல்.ஈ II | 170 |
| | பி.எல்.ஈ III | 142 |
| | ஏச்.ஆர்.எம் | 574 |
| | சேவை முகாமைத்துவம் | 325 |
| நிரந்தர அலுவலகர்கள் | கல்விசார் | 05 |
| | கல்விசாரா | 20 |
| | மொத்தம் | **1484** |

## 08.3 நூலகத்தின் வருமானம் -2015

| வருவாய் | ரூபாக்கள் (ரூ.) |
|---|---|
| தண்டப்பண வருவாய் | 7,214.00 |
| தொலைத்த நூல்களுக்கான அறவீடுகள் | 540.00 |
| தொலைத்த நுழைவுச்சீட்டு | 140.00 |
| மொத்தம் | 7,894.00 |

## 09.0 பிரிவுகள்/ துறைகள்

### 09.1 மனிதவள முகாமைத்துவ பிரிவு

முகாமைத்துவ கற்கை நெறிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கு வசதியளிக்கும் வகையில் மேற்கூறப்பட்ட பிரிவானது இந்த நிறுவகத்தினால் 2007 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பங்கெடுப்போர் முகாமைத்துவ துறையில் அவர்களின் அறிவை மேம்படுத்தவும் மற்றும் புதுப்பித்துக் கொள்ளவும் அவர்களுக்கு சேவையையும் வாய்ப்பையும் வழங்குவதும், முகாமைத்துவ செயற்பாடுகளுடன் இணைந்த திறன்களை அடுத்த கட்டத்திற்கு முன்கொண்டு செல்வதும், முகாமைத்துவத்தில் நவீன நடைமுறைகளை தர்க்க ரீதியாக புரிந்து கொள்ளச் செய்வதும், ஆய்வு ரீதியான இயலுமைகளை முன்னேற்றுவதற்கும், மற்றும் முகாமைத்துவத்துறையில் ஆய்வுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பதும் மற்றும் அமைப்புக்கள் தங்களது ஊழியர்களுக்கு பல்கலைக்கழக பின்னணியில் பயிற்சியளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுப்பதும் இந்த பிரிவின் நோக்கமாகும். முதுமாணி, நிறைவேற்று டிப்ளோமா, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைள் இன்னும் என பல்வேறு பிரிவுகளில் ஏறத்தாழ 501 திறன்மிகு ஊழியர்களை இந்த மனிதவள முகாமைத்துவ பிரிவானது உருவாக்கியுள்ளது.

### 09.2 சேவை முகாமைத்துவ பிரிவு

சேவை முகாமைத்துவ கற்கை நெறிகளை பெற்றுக்கொள்வதற்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கு வசதியளிக்கும் வகையில் இந்த நிறுவகத்தினால் மேற்கூறப்பட்ட பிரிவானது 2007 இல் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டிலுள்ள தொழில்கள் மற்றம் சேவைகள் பிரிவுகளில் இணைந்திருக்கின்ற தொழிலாளர்களுக்கு திறனுக்கான தரச்சான்றிதழ்களை வழங்குகின்ற ஒரேயொரு பிரிவு இதுவாகும். சேவை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் சான்றிதழ் மட்டம் முதல் முதுமாணி மட்டம் வரை ஆரம்பிக்கப்பட்டது. இந்த சேவை முகாமைத்துவ பிரிவு ஏறத்தாழ 273 திறன்சார் தொழிலாளர்களை முதுமாணிப்பட்டம், நிறைவேற்று டிப்ளோமா மற்றும் டிப்ளோமா என வேறுபட்ட பிரிவுகளில் உருவாக்கியது.

## 09.3 விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்.

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்றுக்களுக்கு அமைய தொழில்வாண்மையின் உயர்ந்த தரத்தினை எட்டுவதற்கு விரிவாக்கல் கற்கைநெறிகள் விரிவுபடுத்தப்பட்டன. அனேகமான கற்கைநெறிகள் வேறு நிறுவனங்களின் இணைந்தகூட்டுழைப்புடன் வழங்கப்பட்டன. கற்கைநெறியின் பாடக்கூறுகள் தொழில் செய்வோருக்கு பொருந்தக்கூடிய, அவர்கள் தொடர்புபட்ட துறைகளில் அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த தேவையானவற்றை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டது. இதற்கு 504 மாணவர்கள் பதிவுசெய்திருந்தனர்.

## 09.4 மொழிகள் பிரிவு

### 09.4.1 ஆங்கில பிரிவு

தொழிலாளர் கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்ட காலத்தில் பி.எல்.ஈ.டி நிகழ்சித்திட்டங்களுக்கு சமாந்தரமாக ஆங்கிலக் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டது. சட்டமூல மாற்றத்தின்பின் மனிதவள மேம்பாட்டு நிறுவகம், ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தது, அதன்படி ஆங்கில சான்றிதழ் கற்கை நெறி, ஆசிரியர்களுக்கான ஆங்கிலக்கற்கை நெறி, அடிப்டை ஆங்கிலக் கற்கை நெறி, மற்றும் பேச்சு ஆங்கிலம் என பெயரிடப்பட்டது. இந்த 2015 காலப்பகுதியில், வேறுபட்ட மட்டங்களில், 4391 மாணவர்கள் இந்தக் கற்கையைப்பின்தொடர்ந்தனர்.

### 09.4.2 தமிழ் பிரிவு

இந்த பிரிவு 2010 இல் ஆரம்பிக்கப்பட்டபோதும், தமிழ் மொழிக் கற்கைநெறி 2007 இல் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தமது அறிவை விருத்தி செய்வதற்காக தமிழை மேலதிக மொழியாக கற்க விரும்பும் மாணவர்களுக்கு இது வசதியளித்துள்ளது. இந்த நிகழ்சித்திட்டம் அடிப்படை,இடைநிலை,உயர் என மூன்று மட்டங்களைக் கொண்டுள்ளது. உயர்மட்டத்தை பூர்த்தி செய்த மாணவர்களே டிப்ளோமா பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்.

## 09.5 தகவல் தொழில்நுட்ப பிரிவு

### 09.5.1 சிஸ்கோ வலையமைப்பு கல்வி

கொழும்பு பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு நிறுவகம் அமெரிகாக சிஸ்கோ வலையமைப்பு கல்வியுடன் இணைந்து சிஸ்கோ தகமைச் சான்றுபெற்ற வலையமைப்பு தொழில்வாண்மைக் கற்கை நெறியை வழங்கியது. ஐ.சி.ரி தொழில்துறையில் வேலையில் நுழைய விரும்புவோருக்கான ஆரம்ப மட்டம் அல்லது ஐ.சி.ரி திறனில் மேலும் சிறப்புப் தேர்ச்சி பெறுவதற்கு விரும்பும் மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாடவிதானங்களே சி.சி.என்.ஏ 'றௌட்டிங்' மற்றும் 'சுவிச்சிங்' என்பனவாகும். மேலும் சி.சி.என்.ஏ யை செழுமைப்படுத்த விரும்பும் தனிநபர்களுக்கான சந்தர்ப்பமாக சிஸ்கோ சி.சி.என்.ஏ

பாதுகாப்பு பாடவிதானங்கள் வழங்கப்படுகிறது. இது வலையமைப்பு பாதுகாப்பு தொழில்வாண்மையாளர்களுக்காக வளர்ந்து வரும் தேவைப்பாடுகளை அவர்கள் எதிர்கொள்வதற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடநெறியானது மாணவர்களுக்கு அவர்களது ஆரம்ப கட்ட பாதுகாப்பு தொழிற்றுறை சந்தர்ப்பங்களுக்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கு உதவுகிறது.

### 09.5.2 மக்ரோசொப்ற் அக்கடமி

2012இல் ம.வ.மே.நி. ஆனது இரண்டு மக்ரோசொப்ற் பாடநெறிகளை அறிமுகப்படுத்தியது. இது, கணினி விஞ்ஞானத்தில் உலக அங்கீகாரத் தகைமையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கானது. இந்த நிகழ்ச்சித்திட்டம் மக்ரோசொப்ற் தகவல் தொழில்நுட்ப அக்கடமியுடன் இணைந்து நடத்தப்பட்டது.

மேலதிகமாக, இந்த தகவல் தொழில்நுட்ப பிரிவுானது வணிகத்தில் கணினி கரும மென்பொருள் சான்றிதழ் கற்கை மற்றும் தகவல் தொழில்நூட்ப முகாமைததுவ டிப்ளோமா என பெயர்கொண்ட இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

## 10. 2015 இல் நிறுவகத்தின் அடைவுகள்:

### ❖ மனிவதள அபிவிருத்திகள்

- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது மனிதவள முகாமைத்துவ முதுமாணிப்பட்டம், வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டம், சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி, அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தலில் விஞ்ஞான முதுமாணி, புவித்தகவலியல் முதுமாணி ஆகிய துறைகளில் ஏறத்தாழ 247 முதுமாணிப்பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது.
- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது மனிதவள முகாமைத்துவ, சேவை முகாமைத்துவ, அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவம் மற்றும் திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏறத்தாழ 133 நிறைவேற்று டிப்ளோமா பெற்றவர்களை உருவாக்கியுள்ளது.
- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது சேவை முகாமைத்துவம், போதைப் பொருள் துபிரயோக முகாமைத்துவம், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், சுகாதார மேம்பாடு, சர்வதேச வணிகம், மேலதிக மொழியாக தமிழ், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம், மற்றும் தகவல் முறைமை ஆகிய துறைகளில் ஏறத்தாழ 173 டிப்ளோமா பெற்றவர்களை உருவாக்கியுள்ளது.
- 2015 இல் ம.வ.மே.நி. பொது ஆங்கிலம், பேச்சு ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் தமிழ் மொழி போன்றவற்றில் 4906 சான்றிதழ் பெற்றவர்களை உருவாக்கியது.
- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது புதிய பாடநெறியாக முகாமைத்துவ டிப்ளோமாவை ஆரம்பித்தது. அதில் 22 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.
- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது அனைத்து மட்ட ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை கலதாரி நட்சத்திர விடுதியில் நடாத்தியது.

### ❖ முன்னேற்றமடைந்த பௌதீக வளங்கள்

- 2015 இல் ம.வ.மே.நி. ஆனது திறைசேரி ஒதுக்கீட்டில் இருந்து புதிய கார் ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

# 11. நிதிச் செயற்பாடுகள்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்
2015 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று

| | 2015 (ரூ) | 2015 (ரூ) | 2015 (ரூ) | 2015 (ரூ) |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | |
| நடைமுறையில்லா சொத்துக்கள் | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 72,204,336 | | 64,941,137 | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 24,090,478 | | 15,775,110 | |
| முன் கொடுப்பனவுகள் | 613,234 | | 17,995 | |
| பண்டங்கள்Æ இருப்பு | 1,133,529 | | 1,279,375 | |
| | | 98,041,576 | | 82,013,617 |
| நடைமுறையில்லா பொறுப்புக்கள் | | | | |
| முதலீடுகள் | 3,670,340 | | 3,976,376 | |
| குறுகிய கால வைப்பு | 217,018,297 | | 143,855,658 | |
| ஆதனம் பொறித் தொகுதியும் உபகரணங்களும் | 44,284,221 | | 44,769,425 | |
| | | 264,972,858 | | 192,601,459 |
| மொத்த சொத்துக்கள் | | 363,014,434 | | 274,615,076 |
| பொறுப்புக்கள் | | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| அட்டுறு செலவினங்கள் | 5,745,856 | | 126,402,304 | |
| சென்மதிகள் | 1,698,775 | | 1,156,925 | |
| | | 7,444,631 | | 127,559,229 |
| நடைமுறையில்லா பொறுப்புக்கள் | | | | |
| சென்மதிகள் | 1,405,143 | | 1,352,218 | |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் | 147,935,205 | | 17,426,850 | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 9,416,890 | | 9,827,950 | |
| | | 158,757,238 | | 28,607,018 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 166,201,869 | | 156,166,247 |
| மொத்த சொத்தக்கள் | | 196,812,565 | | 118,448,829 |
| நிகர சொத்துகள்Æசொத்துரிமம் | | | | |
| செலவிடப்பட மூலதன மானியம் | 51,372,647 | | 47,070,927 | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 24,152,861 | | 15,668,896 | |
| ஒதுக்கங்கள் நன்கொடைகள் | 6,742 | | 6,742 | |
| | | 75,532,250 | | 62,746,565 |
| திரட்டிய நிதியம் | | | | |
| பொது ஒதுக்கீடு கணக்கு | 49,176,205 | | 29,164,344 | |
| வருமானம் மற்றும் செலவீடு | 12,605,594 | | 11,340,232 | |
| மறுமதிப்பீடு வரும் | 3,000,000 | | - | |
| | | 64,781,800 | | 40,504,576 |
| மட்டுப்படுத்தப் பட்ட நிதி | | | | |
| ம.வ.மே.நி. அபிவிருத்தி நிதி | 56,489,516 | | 11,190,716 | |
| காப்புறுதி திட்ட நிதி | - | | 3,997,972 | |
| நன்கொடை நிதி | 9,000 | | 9,000 | |
| | | 56,498,516 | | 15,197,688 |
| மொத்தத் தேறிய சொத்துÆசொத்துரிமம் | | 196,812,565 | | 118,448,829 |

ஜே° எஸ் வீ என் டி சொயிசா
மூத்த பதில் நிதியாளர்

பேரா. ஜே.ஏ.எஸ்.கே. ஜெயக்கொடி
பணிப்பாளர்

## மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம்

### 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

| விளக்கம் | 2015 | 2014 |
|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| மீண்டும் வரும் மானியம் | 31,200,000 | 25,000,000 |
| அரச மானியங்களின் கடன் தீரத்தல் - தேய்மானம் | 3,963,826 | 9,296,416 |
| வருமானம் - ஏனைய வருமானம் | 21,126,390 | 17,086,117 |
| வருமானம் - விரிவாக்கல் நிகழ்ச்சி | 181,440,095 | 162,515,433 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | 237,730,311 | 213,897,966 |
| **செயற்பாட்டு செலவினங்கள்** | | |
| ஆளணி வேதனங்கள் | 32,140,937 | 26,042,169 |
| பிரயாணம் | 225,167 | 326,724 |
| விநியோகங்களும் நுகர்வுகளும் | 2,119,349 | 1,228,813 |
| பராமரிப்பு | 1,238,292 | 1,176,058 |
| ஒப்பந்த சேவைகள் | 3,150,265 | 3,861,535 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 3,428,474 | 3,032,310 |
| நன்கொடை | 584,267 | 0 |
| பணிக்கொடை | 11,954,752 | 10,076,171 |
| விரிவாக்கல் நிகழ்ச்சிகள் மீதான செலவினங்கள் | 158,447,477 | 156,813,954 |
| பதிவழித்தல் கணக்கு | 3,975 | |
| **மொத்த செயற்பாட்டு செலவினங்கள்** | 213,292,956 | 202,557,734 |
| காலப் பகுதிக்கான தேறிய மிகைÆ (பற்றாக்குறை) | **24,437,356** | **11,340,232** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/பீ/ஐஎச்ஆர்ஏ/ 6/15/02

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 செப்தெம்பர் 30

பணிப்பாளர்,

மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம் - 01**

நிறுவகம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் கையளிக்கப்பட்டிருந்த 27.86 பேர்ச் காணியின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம் - 07**

சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதி அதன் பயன்பாட்டு ஆயுட்காலம் பூராகவும் முறையான அடிப்படையொன்றில் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும், மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 3,000,000 மீள்மதிப்பீடு பெறுமதியான சொத்துக்களின் பயன்படு

ஆயுட்காலம் மதிப்பீடு செய்யாமல் பழைய பெறுமானத்தேய்வு வீதத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பாடநெறிக் காலம் ஒரு கணக்காண்டு காலத்திற்கு மேற்பட்ட பாடநெறியாகும். பாடநெறி வருமானத்தையும் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தையும் கணக்கீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆங்கிலப் பேச்சு சான்றிதழ் பாடநெறி வருமானத்திலிருந்து ரூபா 4,394,087 தொகை நானாவித நிதியத்திற்கு மாற்றிய காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உரிமை மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 11,831,762 ஆன இலாபப் பகிர்வு, நிறுவகத்தின் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் குறுகிய கால பாடநெறிக்காக பேணிச் செல்லப்படும் வங்கிக் கணக்கில் நீண்டகாலமாக இனங்காணப்படாத ரூபா 4,096,475 ஆன வைப்புக்கள், வருமான மூலம் இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பாடநெறிக் காலம் ஒரு கணக்காண்டு காலத்திற்கு மேற்பட்ட பாடநெறிகளில், பாடநெறி வருமானம் மற்றும் செலவினம் கால அடிப்படையில் ஒவ்வொரு காலப்பகுதியின் வருமானமாக இனங்காணப்படாமல், மீளாய்வாண்டின் வருமானம் உட்பட ரூபா 52,841,001 கூட்டுத்தொகையான பிற்போடப்பட்ட வருமானம் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 12 பாடநெறிகளின் வருமானம் ரூபா 3,729,821 தொகையும் மீளாய்வாண்டில் வேலை நிறைவடைந்திருந்த 18 பாடநெறிகளுக்குரிய வருமானம் ரூபா 20,387,455 தொகையும் முறையே திரட்டிய வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யாமல் பிற்போடப்பட்ட வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) அனைத்து பாடநெறிகளுக்காகவும் செலவிடப்பட்ட ரூபா 348,513 ஆன செலவினம் அக்கணக்கிற்கு இடையே பதிவு செய்வதற்குப் பதிலாக அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) காலக்கழிவு கணக்கீடு செய்யும் போது சொத்துக்களுக்காக நிதி கிடைத்திருந்த மூலம் இனங்காணப்பட்டு வருடாந்த பெறுமானத்தேய்வு அடிப்படயில் மேற்கொண்டு காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்காக மாத்திரம் காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள செலவிடப்பட்ட மூலதனக் கணக்கின் மீதியை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றுடன் ஒப்பிடும் போது ரூபா 832,711 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | (i) மீளாய்வாண்டின் போது 62 சந்தர்ப்பங்களின் போது 06 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,557,244 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) பெற்றுக் கொண்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே |

தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 35 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 3,941,315 கூட்டுத்தொகையான முற்பணங்களுக்காக 30 நாட்கள் முதல் 275 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்க்கப்படும் வரை மேலும் முற்பணம் வழங்கக்கூடாத போதிலும், பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்க்காத மூன்று உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒரு தடவையில் வழங்க ஆகக்கூடிய முற்பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், நிறுவகத்தினால் 52 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,000 இலிருந்து ரூபா 842,265 வரையான வீச்சில் மொத்தம் ரூபா 26,211,702 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் நிதி முதலீடு தொடர்பாக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் ரூபா 69,500,000 தொகையான முதலீடு தொடர்பாக அவ்வாறு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் வருகை மற்றும் வெளியேறல் நேரங்கள் பதிவு செய்ய வேண்டிய போதிலும், 05 கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிப்படுத்தாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,903,304 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/பூச/01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாணக்கல் சபை | மீளாய்வாண்டிற்காக நூலக புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் பாடநெறி வருமானத்தில் மீளாய்வண்டில் மொத்தம் ரூபா 6,195,480 கூட்டுத்தொகை நிறுவகத்தின் 24 ஊழியர்களுக்கு முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு புறம்பாக நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினரின் 12 விரிவுரையாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 2,589,272 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட 03 பாடநெறிகளுக்குரிய வழமையான கடமை நேரத்தில் நடாத்தப்பட்ட பரீட்சை கடமைகளுக்கு சமூகமளித்த ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரமொன்றில்லாமல் மீளாய்வாண்டில் ரூபா 689,750 படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் மூலம் போக்குவரத்து வசதிகளுக்கு உரித்தற்ற 06 பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1,064,250 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 24,437,356 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,340,232 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 13,097,124 இனால் அதிகரித்தமைக்கு குறுங்கால பாடநெறி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் மிகை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது சிறு குறைவொன்று தென்பட்ட போதிலும், மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது அது 115 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பன இணக்கம் செய்யப்பட்டதன் பின்னர் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிறுவகத்தின் பங்களிப்பு முறையே ரூபா 47,458,572 தொகை மற்றும் ரூபா 68,533,045 தொகையாக தென்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பின் அதிகரிப்பு 44 சதவீதமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 13.2:1 மற்றும் 13:1 ஆக இருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களில் 72.6 சதவீதம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் பிரதிபலிக்கின்றன. மீளாய்வாண்டினுள் ரூபா 72,204,336 ஆன காசு மீதி

பேணப்பட்டுச் செல்லப்படுகின்றமை திரவ விகிதம் அதிகரித்துச் சென்றமைக்கான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிறுவக வழிகாட்டலின் 6 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவின் பிரகாரம் புதிய பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீரமொன்றில்லாமல் "Transportation & Logistics Management" டிப்ளோமா என்ற பெயரில் ஒரு வருட பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாணவர் குழுக்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இப்பாடநெறிக்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் கிடைக்காததன் காரணமாக முதலாவது மாணவர் குழுவின் பரீட்சைப் பெறுபேறுகள் வழங்குவது தாமதிக்கப்பட்டதுடன் இரண்டாவது குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வழிகாட்டியை மீறி நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் நிறுவகத்தினால் செய்யப்பட்ட ரூபா 202,250 ஆன விளம்பரச் செலவினம் மற்றும் நேர்முகப் பரீட்சை செலவினம் என்பன பயனற்ற செலவினமாக இருந்தன.

### 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழிய கல்விசார் பட்டப்படிப்பு பாடநெறிக்காக நிதிஏற்பாடு இல்லாதிருக்கையில் இரண்டு பாடநெறி விடயங்களுக்குரிய முன்வைத்தல்களுக்காக (presentation) நிறுவகத்தின் விரிவுரை மண்டபங்களை பயன்படுத்தாமல் ஹொட்டலொன்று பயன்படுத்திய காரணத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய பாடநெறி வருமானங்களிலிருந்து ரூபா 1,108,450 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளின் கூட்டிணைப்பாளர்களுக்கு ரூபா 80,000 வரையான அதிகளவிலான கூட்டிணைப்பாளர் படியொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் பாடநெறியின் ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் வெவ்வேறாக கூட்டிணைப்பு படிகள் பெற்றுக்கொண்டு ஒரே விரிவுரையாளர் பல பாடநெறிகளில் கூட்டிணைப்பாளர் படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தார். அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்ட மொத்த

கூட்டிணைப்புப் படிச் செலவினமான ரூபா 3,500,000 தொகையில் ரூபா 3,000,000 ஆன படிகள் இரண்டு விரிவுரையாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஆறுமாத மூன்று காலப்பகுதியுடன் கூடிய "MSc in Disaster Analysis & Management Mitigation No 01" பாடநெறியின் ஆறுமாத இறுதி காலப்பகுதி பரீட்சை வரை முழுப் பாடநெறிக் கட்டணத்தையும் செலுத்தாத 25 மாணவர்களிடமிருந்து ரூபா 1,325,000 கூட்டுத்தொகையும், 04 ஓராண்டு சான்றிதழ் பாடநெறிகளில் பதிவுசெய்திருந்த 30 மாணவர்களிடமிருந்து ரூபா 525,000 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணத்தையும் அறவிடாமல் இறுதி ஆறுமாத காலப்பகுதி பரீட்சைக்கும் மற்றும் சித்தியடையாத பரீட்சைக்கு மீண்டும் தோற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. ஆறுமாத ஆறுமாத இறுதி காலப்பகுதி பரீட்சை நடாத்தப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிலுவைப் பாடநெறிக் கட்டணத்தை அறவிடுவதற்கு நிறுவகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுள் பாடநெறி மேம்படுத்தலுக்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக ரூபா 2,670,013 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதான பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளாமல் முகவர் நிறுவனமொன்றின் மூலம் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

(உ) கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 14 பேர் ரூபா 40,816 பெறுமதியான 65 புத்தகங்களை வெளியில் எடுத்துச்சென்று 01 வருடம் முதல் 10 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 65 புத்தகங்களில் 28 புத்தகங்கள் விரிவுரையாளரொருவரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததமை அவதானிக்கப்பட்டதுடன் அப்புத்தகங்கள் தொடர்பாக நிறுவகம் எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தினுள் பயன்படுத்தப்படுகின்ற அச்சிடல் மற்றும் நிழற்பட பிரதியெடுத்தல் இயந்திரங்களை சேவை செய்வதற்காக மீளாய்வாண்டினுள் சேவை உடன்படிக்கைகளுக்காக 09 நிறுவனங்களுக்கு ரூபா 155,771 தொகை சேவைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் எவ்வித சேவைகளும் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) முறையாக எதிர்வுகூறப்பட்ட மதிப்பீடொன்று இல்லாமல் மீளாய்வாண்டினுள் ரூபா 180,399 ஆன செலவினத்திற்காக 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 689,500 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

மீளாய்வாண்டினுள் நிறுவகத்தில் கருத்திற் கொள்ளப்படக்கூடிய அளவில் காசு மீதியான்று தொடர்ச்சியாக பேணப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டமையால் அப்பணம் நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் திறைசேரியிடமிருந்து மூலதன மானியமாக ரூபா 10,000,000 தொகை கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், செலவிடப்பட்ட மூலதன மானியம் ரூபா 1,516,035 தொகையாக இருந்தமையால் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 8,483,965 தொகையான மூலதன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாத மூலதன மானியக் கணக்கின் திரட்டிய மீதி ரூபா 24,152,861 ஆக இருந்தமையால் அரசின் நிதி வினைத்திறனாக ஈடுபடுத்தப்படாமையும் தொடர்ச்சியாக நிறுவகத்தின் இலக்கை நிறைவேற்ற முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நீண்டகாலமாக களஞ்சியத்தின் கூரை உடைந்து களஞ்சியத்தினுள் நீர் கசிந்து கொண்டிருந்த காரணத்தினால் களஞ்சியத்தின் ஒரு பகுதி கைவிடப்பட்டிருந்தது. கறையான்களாலும் களஞ்சியத்தில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் சேதமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், திருத்தியமைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்த உத்தியோகத்தரொருவருக்காக ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சேமலாப நிதி செலுத்தப்படாத காரணத்தினால் தொழில் ஆணையாளரின் கட்டளையின் பிரகாரம் ஊழியரின் பங்களிப்பான ரூபா 243,199 தொகை மற்றும் உரிய திகதியில் பங்களிப்புப் பணம்

செலுத்தாமையால் மிகைக் கட்டணமாக ரூபா 364,797 தொகையுடன் ரூபா 607,996 தொகை செலுத்த நேர்ந்திருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு | கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்படாடமை, சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு | (i) எல்லையை மிகைத்து முற்பணம் வழங்கபட்டடிருந்தமை.<br>(ii) சில்லறைக் காசு எல்லை பின்பற்றாமை. பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் கட்டுப்பாடொன்றில்லா மல் சிறாப்பருக்கு வழங்கப் பட்டிருந்தமை, திறைசேரி அங்கீகாரமின்றி நிதி முதலீடு செய்தமை, அங்கீகாரமன்றி பாடநெறி வருமானத்தை படிகளாக ஊழியர்களுக்கு வழங்கியமை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1979 இன் 11 ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டு நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
| 2<br>2.1 | நிதிக்கூற்றக்கள்<br><br>முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | | இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். | ஏற்றுக்கொள்கிறோம். | |
| 2.2<br><br>2.2.1 | நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br><br>இலங்கை பொதுத்துறை கணக்கீடுக் நியமம் | | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 | நிறுவகம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் கையளிக்கப்பட்டிருந்த 27.86 பேர்ச் காணியின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலத்தின் உரிமை தொடர்பாக நிதி வெளியீடுகள் மூலம் சமர்ப்பிக்க அது தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. | தகவல் சேகரிக்கப்படுகின்றது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| | (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 | சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதி அதன் பயன்பாட்டு ஆயட்காலம் பூராகவும் முறையான அடிப்படையொன்றில் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும், மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 3,000,000 மீள்மதிப்பீடு பெறுமதியான சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மதிப்பீடு செய்யாமல் பழைய பெறுமானத்தேய்வு வீதத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | 2016 ஆம் ஆண்டில் உரிய சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கைக் காலம் கணிக்கப்பட்டு நிதி அறிக்கைகளில் காட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 2.2.2 | **கணக்கீட்டுக் கொள்கைகள்** | | பாடநெறிக் காலம் ஒரு கணக்காண்டு காலத்திற்கு மேற்பட்ட பாடநெறியாகும். பாடநெறி வருமானத்தையும் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தையும் கணக்கீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | கணக்கியல் கொள்கைகள் 2016 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. |
| 2.2.3 | **கணக்கீட்டுக் குறைபாடுகள்** | | **பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.** | | |
| | | | (அ) ஆங்கிலப் பேச்சு சான்றிதழ் பாடநெறி வருமானத்திலிருந்து ரூபா 4,394,087 தொகை நானாவித நிதியத்திற்கு மாற்றிய காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டிலிருந்து இம்மாற்றங்கள் நிதி அறிக்கைகள் மூலம் சரியாக சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திருத்தப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (ஆ) | உரிமை மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 11,831,762 ஆன இலாபப் பகிர்வு, நிறுவகத்தின் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டிலிருந்து இவற்றை சரியாக சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2016 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. |
| | (இ) | நிறுவகத்தின் குறுகிய கால பாடநெறிக்காக பேணிச் செல்லப்படும் வங்கிக் கணக்கில் நீண்டகாலமாக இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதில் ஒரு மில்லியனுக்கான வருமான ஆதாரங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. | |
| | (ஈ) | பாடநெறிக் காலம் ஒரு கணக்காண்டு காலத்திற்கு மேற்பட்ட பாடநெறிகளில், பாடநெறி வருமானம் மற்றும் செலவினம் கால அடிப்படையில் ஒவ்வொரு காலப்பகுதியின் வருமானமாக இனங்காணப்படாமல், மீளாய்வாண்டின் வருமானம் உட்பட ரூபா 52,841,001 கூட்டுத்தொகையான பிற்போடப்பட்ட வருமானம் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 12 பாடநெறிகளின் வருமானம் ரூபா 3,729,821 தொகையும் மீளாய்வாண்டில் வேலை நிறைவடைந்திருந்த 18 பாடநெறிகளுக்கரிய வருமானம் ரூபா 20,387,455 தொகையும் முறையே திரட்டிய வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யாமல் பிற்போடப்பட்ட வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டிலிருந்து சீரற்ற (வேறுபடும்) வருமானத்தை முறையாகக் கணக்கு வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| | | (உ) | அனைத்து பாடநெறிகளுக்காகவும் செலவிடப்பட்ட ரூபா 348,513 ஆன செலவினம் அக்கணக்கிற்கு இடையே பதிவு செய்வதற்குப் பதிலாக அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | 2016 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. |
| | | (ஊ) | காலக்கழிவு கணக்கீடு செய்யும் போது சொத்துக்களுக்காக நிதி கிடைத்திருந்த மூலம் இனங்காணப்பட்டு வருடாந்த பெறுமானத்தேய்வு அடிப்படையில் மேற்கொண்டு காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்காக மாத்திரம் காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | |
| 2.2.4 | **விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்** | நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள செலவிடப்பட்ட மூலதனக் கணக்கின் மீதியை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றுடன் ஒப்பிடும் போது ரூபா 832,711 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|---|
| 2.3 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | | | | | |
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்புகள் | | பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | (அ) | இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 371 | (i) | மீளாய்வாண்டின் போது 62 சந்தர்பங்களின் போது 06 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,557,244 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் அடிப்படையில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் முற்பணம் வழங்கமுடியுமாயினும் நிறுவனத்தினால் நடாத்தப்படும் கற்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நான்கு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் முற்பணம் வழங்க முடியாமையினால் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாதோருக்கும் முற்பணம் வழங்கப்படுகின்றது. இதற்காக கல்விக் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. | பதவிநிலை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு முற்பணம் வழங்கல் குறைக்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்படும் முற்பணத்தின் தொகையையும் மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (ii) | பெற்றுக் கொண்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 35 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 3,941,315 கூட்டுத்தொகையான முற்பணங்களுக்காக 30 நாட்கள் முதல் 275 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட முற்பணங்களின் மீதிகள் ஒழுங்காக மீளப்பெறப்பட்டுள்ளதாயினும் அவற்றுக்கான பற்றுச்சீட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமை, அங்கு காணப்படும் குறைபாடுகளினால் அதிகளவான முற்பணங்கள் மீளப்பெறலுக்கு அதிக காலம் சென்றுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள முற்பணங்களை விரைவாக மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்கப்படும் முற்பணங்களை மீளப்பெறல் உரிய காலத்திற்குள் நடைபெறுகின்றன. |
| | (iii) | பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்க்கப்படும் வரை மேலும் முற்பணம் வழங்கக்கூடாத போதிலும், பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்க்காத மூன்று உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. | முற்பணம் வழங்கக்கூடிய நிறுவனத்தின் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையானது கற்கைநெறிகளின் எண்ணிக்கையிலும் குறைவானதாகையால் ஒரு ஊழியருக்கு பல கற்கைநெறிகளின் வேலைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்நிரந்தர ஊழியருக்கு வெவ்வேறு கற்கைநெறிகளின் கீழ் முற்பணம் வழங்க நேர்ந்துள்ளது. அவ்வாறு முற்பணம் வழங்கப்பட்ட ஊழியர்கள் நம்பிக்கை துரோகம் இழைக்காமல் மீளளிப்பு செய்துள்ளமையினால் நிறுவனத்தில் உள்ள குறைந்தளவு நிரந்தர ஊழியர்களைக் கொண்டு கற்கைநெறிகளை வெற்றிகரமாக நடாத்துவதற்காக ஒரே ஊழியருக்கு முற்பணங்களை வழங்க நேரிட்டுள்ளது. | நிறுவனத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>நிறுவனத்தை வினைத்திறனாக நடாத்துவதற்கு ஏற்றவாறு நடாத்தப்படும் கற்கைநெறிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| | (ii) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | |
| | (ஆ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒரு தடவையில் வழங்க ஆகக்கூடிய முற்பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், நிறுவனத்தினால் 52 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,000 இலிருந்து ரூபா 842,265 வரையான வீச்சில் மொத்தம் ரூபா 26,211,702 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. | முற்பணம் வழங்கும்போது ரூபா. 100,000 க்கு மேல் காசு முற்பணம் வழங்காதிருக்க 2015 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவ்எல்லையை மீறி எதுவித முற்பணமும் வழங்கப்படாததுடன் வருடத்தின் ஆரம்பத்தில் இவ்எல்லைக்கு மேல் முற்பணங்கள் மற்றும் காசோலை முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது ரூபா. 100,000 க்கு மேல் காசு முற்பணம் வழங்கப்படுவதில்லை | தற்போது எந்தவொரு ஊழியருக்கும் ரூபா. 100,000 க்கு மேல் காசு முற்பணம் வழங்கப்படுவதில்லை. |
| | (இ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் நிதி முதலீடு தொடர்பாக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் ரூபா 69,500,000 தொகையான முதலீடு தொடர்பாக அவ்வாறு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்காக திறைசேரிக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| | (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலையான சொத்துக்களின் ஆவணப்படுத்தல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | தற்போது சொத்து மதிப்பு மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வேலையில் 75% நிறைவுபெற்றுள்ளது. |
| | (உ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் xx ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் வருகை மற்றும் வெளியேறல் நேரங்கள் பதிவு செய்ய வேண்டிய போதிலும், 05 கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிப்படுத்தாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,903,304 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விரல் அடையாள இயந்திரத்தில் தங்களது வருகை மற்றும் வெளியேறலை பதிவு செய்யுமாறு அனைத்து ஊழியர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| | (ஊ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/பூச/01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாணக்கல் சபை | மீளாய்வாண்டிற்காக நூலக புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நூலகத்தின் புத்தகங்களின் கணக்கெடுப்பு தற்போது நடைபெறுகின்றது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| 2.4 | போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| | | (அ) | நிறுவகத்தின் பாடநெறி வருமானத்தில் மீளாய்வண்டில் மொத்தம் ரூபா 6,195,480 கூட்டுத்தொகை நிறுவகத்தின் 24 ஊழியர்களுக்கு முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இக்கொடுப்பனவானது நிறுவனத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகளின் மூலம் பெறும் வருமானத்திலிருந்து நிறுவனத்தின் ஊழியர்களுக்கு அக்கற்கைநெறிகளுக்கு வழங்கும் பங்களிப்பிற்காக வழங்கப்படுகின்றது. அரச நிதியினூடாக நடாத்தப்படும் நிறுவனத்தின் பிரதான கற்கையான தொழிலாளர் கல்விமாணி கற்கைக்கு மேலாக கட்டணம் அறவிடும் அதிகளவு கற்கைநெறிகளை நடாத்தும் நிறுவனத்தின் ஊழியர்கள் வழங்கும் பங்களிப்புக்கு அவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு தற்போது சுற்றறிக்கை இல. 2016/01 இல் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை இல. 2016/01 இற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு புறம்பாக நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினரின் 12 விரிவுரையாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 2,589,272 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சமீப காலம் வரை கற்கைநெறிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் தொடர்பாக பொது திறைசேரியோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ எவ்வித சுற்றுநிரூபத்தையும் வெளியிடாததுடன் கல்விக் குழுவினால் அனுமதிக்கப்படும் அக்கற்கைநெறிகளின் வரவு செலவுத் திட்டத்தின்படி இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. எனினும் 2015 இல் நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய இயக்குனரினால் தயாரிக்கப்பட்ட புதிய வரவு செலவுத் திட்ட வழிகாட்டியின் (New Budget Guideline) அடிப்படையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகளின் வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஊழியர்களின் கொடுப்பனவு 80 % இனால் குறைவடைந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் நீங்கள் எதிர்பார்ப்பது போல் இக்கொடுப்பனவு மேலும் குறையும். மேலும் தற்போது கொடுப்பனவு வழங்குவதற்கு சுற்றறிக்கை இல. 2016/01 இன் கீழ் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை இல. 2016/01 இற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (இ) | நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட 03 பாடநெறிகளுக்குரிய வழமையான கடமை நேரத்தில் நடாத்தப்பட்ட பரீட்சை கடமைகளுக்கு சமூகமளித்த ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரமொன்றில்லாமல் மீளாய்வாண்டில் ரூபா 689,750 படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | தற்போது இக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழு சுற்றறிக்கையின் மூலம் போக்குவரத்து வசதிகளுக்கு உரித்தற்ற 06 பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1,064,250 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது இக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | |
| 3 நிதி மீளாய்வு<br>3.1 நிதி விளைவுகள் | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 24,437,356 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,340,232 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 13,097,124 இனால் அதிகரித்தமைக்கு குறுங்கால பாடநெறி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.<br><br>மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் மிகை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது சிறு குறைவொன்று தென்பட்ட போதிலும், மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது அது 115 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பன இணக்கம் செய்யப்பட்டதன் பின்னர் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிறுவகத்தின் பங்களிப்பு முறையே ரூபா 47,458,572 தொகை மற்றும் ரூபா 68,533,045 தொகையாக தென்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பின் அதிகரிப்பு 44 சதவீதமாக இருந்தது. | ஏற்றுக்கொள்கிறோம். | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| 3.2 | பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு | சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 13.2.1 மற்றும் 13.1 ஆக இருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களில் 72.6 சதவீதம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் பிரதிபலிக்கின்றன. மீளாய்வாண்டினுள் ரூபா 72,204,336 ஆன காசு மீதி பேணப்பட்டுச் செல்லப்படுகின்றமை திரவ விகிதம் அதிகரித்துச் சென்றமைக்கான காரணமாக இருந்தது. | ஏற்றுக்கொள்கிறோம். | |
| 4<br>4.1 | செயற்பாட்டு மீளாய்வு<br>முகாமைத்துவ செயற்பாடுகள் | நிறுவக வழிகாட்டலின் 6 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவின் பிரகாரம் புதிய பாடநெறியொன்றை ஆரம்பிபதற்காக கொழும்பு பல்கலைக்கழத்தினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், இவ்வாறான அங்கீகாரமொன்றில்லாமல் "Transportation & logistics management" டிப்ளோமா என்ற பெயரில் ஒரு வருட பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாணவர் குழுக்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இப்பாடநெறிக்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் கிடைக்காததன் காரணமாக முதலாவது மாணவர் குழுவின் பரீட்சைப் பெறுபேறுகள் வழங்குவது தாமதிக்கப்பட்டதுடன் இரண்டாவது குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் மீளச் செலுத்தப்பட்டதன் மூலம் நிறுவகத்தினால் செய்யப்பட்ட ரூபா 202,250 ஆன விளம்பரச் செலவினம் மற்றும் நேர்முகப் பரீட்சை செலவினம் என்பன பயனற்ற செலவினமாக இருந்தன. | தற்போது புதிய கற்கைநெறிகள் அனுமதியின்றி ஆரம்பிக்கப்படுவதில்லை. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| 4.2 | செயற்பாட்டு வினைத்திறனின்மை | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| | | (அ) | ஊழிய கல்விசார் பட்டப்படிப்பு பாடநெறிக்காக நிதிஏற்பாடு இல்லாதிருக்கையில் இரண்டு பாடநெறி விடயங்களுக்குரிய முன்வைத்தல்களுக்காக (presentation) நிறுவகத்தின் விரிவுரை மண்டபங்களை பயன்படுத்தாமல் ஹொட்டலொன்று பயன்படுத்திய காரணத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய பாடநெறி வருமானங்களிலிருந்து ரூபா 1,108,450 தொகை செலவிடப்பட்டிருந்தது. | கல்வி குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக தற்போது சகல கற்கைநெறிகளிலும் 2% தொழிலாளர் கல்விமாணி கற்கைக்காக ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் கல்விமாணி கற்கையானது மாணவர்களிடம் கட்டணம் அறவிடாது அரசின் திறைசேரி வழங்கும் நிதியிலேயே நடைபெறுகின்றது. எனவே இக்கற்கைநெறியின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காக ஏனைய கட்டணம் அறவிடும் கற் கைநெறிகளின் மேலதிக நிதிகள் பயன்படுத்தப்படும். தொழிலாளர் கல்விமாணி கற்கையின் மாணவர்கள் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் ஆவர். அதனால் இவர்களுக்கான விரிவுரைகள் வார நாட்களில் பி.ப. 5.00 முதல் இரவு 7.30 வரை நடைபெறும். எனவே முன்னிலைப் படுத்தல் (presentation) மற்றும் பயிற்சிகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.<br><br>தற்போது மனித வள மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒரு சிறிய விரிவுரையரங்கு மட்டுமே உள்ளது. தொழிலாளர் கல்விமாணி கற்கையின் விரிவுரைகள் கல்வி பீடத்திலேயே நடைபெறுகின்றன. வாரஇறுதி நாட்களில் கல்வி பீடத்தினால் பல கற்கைநெறிகள் நடாத்தப்படுவதனால் இக்கற்கைக்கு விரிவுரையரங்கு வசதியில்லை. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | | தொழிலாளர் கல்விமாணி பகுதி I கற்கையின் முன்னிலைப் படுத்தல் (presentation) 9 நிலையங்களிலும் பகுதி III கற்கையின் முன்னிலைப் படுத்தல் (presentation) 6 நிலையங்களிலும் நடைபெறுகின்றன. வாரஇறுதி நாட்களில் இவ்வாறான நிலையங்களை பல்கலைக்கழகத்தினுள் அமைத்தல் கடினமாகும்.<br><br>மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் முன்னிலைப் படுத்தலுக்கு மேலதிகமாக ஆரம்ப விரிவுரைகள், அறிமுகவுரை போன்ற மாணவர்களின் அறிவு, திறன் மற்றும் அணுகுமுறைகளின் மேம்பாட்டுக்கு அவசியமான சில அம்சங்கள் உள்ளன. முன்னிலைப் படுத்தல் மதிப்பீட்டுக்கு விரிவுரையாளர்கள் பலர் பயன்படுத்தப்படுகின்றனர். அவர்களில் பலரின் சேவையை வார இறுதி நாட்களில் மட்டுமே பெறலாம். இம்முன்னிலைப் படுத்தல்கள் நீண்ட நேரம் நடைபெறுவதனால் அவர்களுக்கு போதிய வசதிகளை வழங்கல் அவசியமாகும். தொழிலாளர் கல்விமாணி கற்கை மாணவர்கள் அனைவரும் தொழில் புரியும் வயதுவந்தவராவர். அவர்கள் வேலை, தனிப்பட்ட வாழ்க்கை போன்றவற்றில் ஓய்வின்றி ஈடுபட்டுள்ளோர்களாவர். ஆகையால் அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களாக செயற்படும் காலம் மிக்க குறைவானதாகும். | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | | குழுச் செயற்திறன், தொடர்பாடல் திறன், மற்றும் தலைமைத்துவத் திறன் போன்ற அத்தியாவசிய திறன்களை மேம்படுத்திக் கொள்ளலே மேற்கூறப்பட்ட திட்டங்களின் நோக்கங்களாவதுடன் இத்திறன்கள் தற்போது பட்டதாரிகளின் தரத்தில் அவசியமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>எனவே இத்திறன்களை மேம்படுத்தல் அவர்களது பரீட்சையமான சூழலில் அல்லாது வேறு சூழலில் நடாத்துதல் சிறந்தது என பல்லைக்கழக கல்விமான்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு பயிற்சி வகுப்புக்கள் ஹோட்டலில் நடைபெற்றுள்ளன.<br>மேலும், இச்செலவானது கலந்து கொண்ட வளவாளரின் கொடுப்பனவு, ஏனைய ஊழியர்களின் கொடுப்பனவு மற்றும் முழு திட்டதிற்குமான செலவாகும். | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (ஆ) | நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளின் கூட்டிணைப்பாளர்களுக்கு ரூபா 80,000 வரையான அதிகளவிலான கூட்டிணைப்பாளர் படியொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் பாடநெறியின் ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் வெவ்வேறாக கூட்டிணைப்பு படிகள் பெற்றுக்கொண்டு ஒரே விரிவுரையாளர் பல பாடநெறிகளில் கூட்டிணைப்பாளர் படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தார். அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்ட மொத்த கூட்டிணைப்புப் படிச் செலவினமான ரூபா 3,500,000 தொகையில் ரூபா 3,000,000 ஆன படிகள் இரண்டு விரிவுரையாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | நிறுவனத்தினுள் தயாரிக்கப்பட்டுள்ள புதிய வரவு செலவுத் திட்ட வழிகாட்டியின் (New Budget Guideline) அடிப்படையில் அனைத்து நிதி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். எதிர்காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொகுதி I மற்றும் தொகுதி II என்பன வெவ்வேறாகவே நடைபெறுகின்றன. சகல நடவடிக்கைகளும் வெவ்வேறாகவே நடைபெறுகின்றன. தற்போது தொகுதி I மற்றும் தொகுதி II க்கான ஒருங்கிணைப்பாளர் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் புதிய விரிவுரையாளர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன்பின் இவ்விரிவுரையாளர்கள் ஒருங்கிணைப்பு செய்யும் கற்கைகளின் எண்ணிக்கை குறைவடையும். | தற்போது ஒரு கற்கையின் வெவ்வேறு மாணவர் தொகுதிக்கு தனித்தனியே ஒருங்கிணைப்பாளர் கொடுப்பனவு வழங்கல் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு கற்கைக்கான ஒருங்கிணைப்பாளர் கொடுப்பனவு அதிகபட்சம் ரூபா 25,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (இ) | ஆறுமாத மூன்று காலப்பகுதியுடன் கூடிய “MSc in Disaster Analysis & Management Mitigation No 01” பாடநெறியின் ஆறுமாத இறுதி காலப்பகுதி பரீட்சை வரை முழுப் பாடநெறிக் கட்டணத்தையும் செலுத்தாத 25 மாணவர்களிடமிருந்து ரூபா 1,325,000 கூட்டுத்தொகையும், 04 ஓராண்டு சான்றிதழ் பாடநெறிகளில் பதிவுசெய்திருந்த 30 மாணவர்களிடமிருந்து ரூபா 525,000 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணத்தையும் அறவிடாமல் இறுதி ஆறுமாத காலப்பகுதி பரீட்சைக்கும் மற்றும் சித்தியடையாத பரீட்சைக்கு மீண்டும் தோற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. ஆறுமாத ஆறுமாத இறுதி காலப்பகுதி பரீட்சை நடாத்தப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிலுவைப் பாடநெறிக் கட்டணத்தை அறவிடுவதற்கு நிறுவகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | தற்போது வரை பல மாணவர்கள் முழுக் கட்டணத்தினையும் நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளனர். மீதமுள்ளவர்களில் சிலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதுடன் அவர்கள் கற்கைநெறியை நிறைவு செய்யவில்லை. ஏனையவர்களுக்கு ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் அதன் முடிவின் பின்னர் பணத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும். இக்கற்கைகள் வாரஇறுதி நாட்களில் நடைபெறுவதால் கட்டணங்களை அறவிடுவதில் சிரமங்கள் உள்ளதுடன் தற்போது அனைத்து கற்கைகளின் ஆரம்பத்திலேயே கட்டணத்தை அறவிட முகாமைத்துவம் முடிவு செய்துள்ளதால் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாது. தற்போது கற்கைக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான வழிகாட்டி ஒன்று கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>இம்மாணவர்களில் அதிகமானோர் தற்போது வரையில் கட்டணங்களைச் செலுத்தியுள்ளதுடன் ஏனையோர் பணம் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். | 05 மாணவர்கள் செலுத்தவேண்டிய மீதிக்கட்டணம் செலுத்தாமையினால் அவர்களது பரீட்சை முடிவுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | | | பரீட்சை முடிவுகள் வெளியிடும்போது கட்டணங்களை முழுமையாகச் செலுத்தி முடிக்க ஒப்புக் கொண்ட மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து மீதிக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகமான மாணவர்கள் பணம் செலுத்தியதாகக் கூறினும் அதனை ஒப்புவிப்பதற்கான பற்றுச்சீட்டுகள் எதனையும் சமர்ப்பிக்க தவறியுள்ளதால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. | |
| | (ஈ) | மீளாய்வாண்டினுள் பாடநெறி மேம்படுத்தலுக்காக பத்திரிகை விளம்பரங்களுக்காக ரூபா 2,670,013 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதான பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளாமல் முகவர் நிறுவனமொன்றின் மூலம் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. | பத்திரிகை நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு விளம்பரம் செய்வதனை விட குறைந்த செலவில் விளம்பர முகவர்களினூடாக விளம்பரம் செய்யலாம் என்பதனால் இவ்வாறு விளம்பரம் செய்யப்பட்டது. அதேபோன்று இவ்விளம்பர முகவர்கள் எமது நிறுவனத்தின் தேவைக்கு ஏற்றவாறு விளம்பரங்களை வடிவமைத்துத் தருதல் மேலதிக நன்மையாகும். | தற்போது பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் விளம்பர முகவர்கள் ஆகிய இருசாராரிடமும் இருந்து விலை கோரல் நடைபெறுகின்றது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (உ) | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 14 பேர் ரூபா 40,816 பெறுமதியான 65 புத்தகங்களை வெளியில் எடுத்துச்சென்று 01 வருடம் முதல் 10 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 65 புத்தகங்களில் 28 புத்தகங்கள் விரிவுரையாளரொருவரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததமை அவதானிக்கப்பட்டதுடன் அப்புத்தகங்கள் தொடர்பாக நிறுவகம் எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | ஏடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| | (ஊ) | நிறுவகத்தினுள் பயன்படுத்தப்படுகின்ற அச்சிடல் மற்றும் நிழற்பட பிரதியெடுத்தல் இயந்திரங்களை சேவை செய்வதற்காக மீளாய்வாண்டினுள் சேவை உடன்படிக்கைகளுக்காக 09 நிறுவனங்களுக்கு ரூபா 155,771 தொகை சேவைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் எவ்வித சேவைகளும் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சாட்சியை முன்வைக்க முடியும். | |

| | நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| | | (எ) | முறையாக எதிர்வுகூறப்பட்ட மதிப்பீடொன்று இல்லாமல் மீளாய்வாண்டினுள் ரூபா 180,399 ஆன செலவினத்திற்காக 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 689,500 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | முற்பணம் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் ஒழுங்கான செலவு மதிப்பீடுகளினூடாக முற்பணம் பெற்றுக் கொள்ளாமையினால் இது இடம்பெற்றுள்ளதுடன், தற்போது சரியான செலவு மதிப்பீடுகளினூடாக மட்டுமே முற்பணம் வழங்கப்படுகின்றது. | |
| 4.3 | நிதியத்தின் குறைந்த பயன்பாடு | | மீளாய்வாண்டினுள் நிறுவகத்தில் கருத்திற் கொள்ளப்படக்கூடிய அளவில் காசு மீதியானது தொடர்ச்சியாக பேணப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டமையால் அப்பணம் நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கிறோம். | |
| 4.4 | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (அ) | மீளாய்வாண்டினுள் திறைசேரியிடமிருந்து மூலதன மானியமாக ரூபா 10,000,000 தொகை கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், செலவிடப்பட்ட மூலதன மானியம் ரூபா 1,516,035 தொகையாக இருந்தமையால் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 8,483,965 தொகையான மூலதன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாத மூலதன மானியக் கணக்கின் திரட்டிய மீதி ரூபா 24,152,861 ஆக இருந்தமையால் அரிசின் நிதி வினைத்திறனாக ஈடுபடுத்தப்படாமையும் தொடர்ச்சியாக நிறுவகத்தின் இலக்க நிறைவேற்ற முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் கட்டிடத்தின் மிகுதி நிர்மாணத்திற்காக இப்பணமானது ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து இவ்வேலைத்திட்டமானது பிற்போடப் பட்டமையினால் இப்பணமானது உபயோகிக்கப்படவில்லை. தற்போது இந்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இப்பணமானது உபயோகிக்கப்படுகின்றது. | |
| | (ஆ) | நீண்டகாலமாக களஞ்சியத்தின் கூரை உடைந்து களஞ்சியத்தின் ஒரு பகுதி கைவிடப்பட்டிருந்தது. கறையான்களாலும் களஞ்சியத்தில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் சேதமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், திருத்தியமைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிறுவனத்தின் கட்டிட மீளமைப்பு திட்டம் வடிமைக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் இம்மீளமைப்பு நடைபெறும். மேலும் களஞ்சியசாலை உரிய இடத்தில் அமைக்கப்படும். | |

| | நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| 4.5 | **இனங்காணப்பட்ட நட்டங்கள்** | ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்த உத்தியோகதரொருவருக்காக ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சேமலாப நிதி செலுத்தப்படாத காரணத்தினால் தொழில் ஆணையாளரின் கட்டளையின் பிரகாரம் ஊழியரின் பங்களிப்பான ரூபா 243,199 தொகை மற்றும் உரிய திகதியில் பங்களிப்புப் பணம் செலுத்தாமையால் மிகைக் கட்டணமாக ரூபா 364,797 தொகையுடன் ரூபா 607,996 தொகை செலுத்த நேர்ந்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2016 ஜனவரி மாதம் முதல் ஊழியர் சேமலாப நிதித் தவணைக் கொடுப்பனவுகள் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்தினால் அவர்களுக்கு வழங்கப்படும் B அட்டைகள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. | |
| 5 | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கேரப்படுகின்றது. | | |
| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள்** | அவதானிப்புக்கள் | | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை | | கொள்வனவுத் திட்டத்திற்கு அமைவாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்படாடமை, சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை. | | நிலையான சொத்துப் பதிவுகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. | | சொத்துக் கணக்கெடுப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | எல்லையை மிகைத்து முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை. | ப.மா.ஆ நிதிச் சுற்றறிக்கை இல. 05/2015 இன் அடிப்படையில் முற்பணத்தின் எல்லைகள் மீறப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | | கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் | 2016 ஆம் ஆண்டாகும் போது எடுக்கப் பட்ட நடபடிக்கைகளின் தற்போதைய நிலைமையும் அபிவிருத்தியும் |
|---|---|---|---|---|
| | (ii) | சில்லறைக் காசு எல்லை பின்பற்றாமை. பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் கட்டுப்பாடொன்றில்லாமல் சிறாப்பருக்கு வழங்கப் பட்டிருந்தமை, திறைசேரி அங்கீகாரமின்றி நிதி முதலீடு செய்தமை, அங்கீகாரமன்றி பாடநெறி வருமானத்தை படிகளாக ஊழியர்களுக்கு வழங்கியமை. | திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்க காலதாமதமானதால் மேலதிக பணத்தினை முதலீடு செய்ய நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது. இதன் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் முழுமையாக தொழிலாளர் கல்விமாணி கற்கைக்காக செலவிடப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர் கல்விமாணி கற்கைக்கான அரசின் சுமை நீக்கப்பட்டுள்ளது.<br><br>அனைத்து பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் சிரேஷ்ட உதவி நிதியாளரின் பொறுப்பில் உள்ளதுடன் இதற்காக ஒரு பதிவு ஏடும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 05/2015 இன் அடிப்படையில் சிறிய நிதி வரம்புகள் பராமரிக்கப்படுகின்றன. | |